38

கிறிஸ்து சமயக் கீர்த்தனைகள்.

இரண்டாம் பாகம்.

(FOR USE IN CHRISTIAN SCHOOLS Etc.)



by

Mr. S. D. Asirvatham Bahgavathar.

C. S. M. SCHOOL, MUSIC INSTRUCTOR, MADURA.

PUBLISHED BY

Y. M. C. A. KREMMERPURAM BRANCH,

MADURA.

1931.

[Price 1 Anna.

The Nadar Press, Madura—1931.

Q6:41
N31
176269

Foreword.

BY

OLAF. A. JOHANSSON ESQ.,

SECRETARY,

Y. M. C. A. KREMMERPURAM BRANCH.

MADURA.

It is a great pleasure to introduce to the public the II Part of Christian Songs composed by Mr. S. D. Asirvadam Bahavadar, who has a natural taste for Indian Music. We hope that this book also will become very popular as the songs are composed in accordance with the Scientific Principles of Indian Music. Since the first part has already been approved by the Text-Book Committee, the second part also certainly will be very valuable to the institutions and churches for the Spiritual growth.

Y. M. C. A. KREMMERPURAM BRANCH,

MADURA.

Dated 3rd December 1931.

ஆக்கியோன் குறிப்பு.

' கிறிஸ்து சமயக்கீர்த்தனைகள் ' முதற்பாகம், துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. (Approved by the Text-Book Committee, Madras, Vide Page 672. Part I B. the Fort St. George Gazette dated 10th November 1931.)

1867
784.0954

இப்புத்தகம் சங்கீத சாஸ்திரமேரைக் கேற்க இயற்றப்பட்டது. கிறிஸ்தவப் பாடசாலைகளில் இந்திய சங்கீதங் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், கர்நாடக சங்கீதம் கற்கும் ஆரம்ப மாணவர்களுக்கும் மிகவும் பயன் தரத்தக்கது.

ஆதலால் கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவ ஆரம்ப, போதனை முறை, உயர்தரக் கலாசாலைகளின் மேலதிகாரிகளும் இப்புத்தகத்தை ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

' கிறிஸ்து சமயக்கீர்த்தனைகள் ' இரண்டாம் பாகம், கிறிஸ்துவின் பிறப்பு, புதுவருடம் என்ற பண்டிகை நாட்களுக்கும், பொதுவாகப் பகவத் ஸ்தோத்திரம் புரியவும் தகுந்தது. இதில் திருப்புகழ், தேவாரம், தியாகராஜக் கீர்த்தனைகள் முதலிய வர்ணங்களில் அமைக்கப்பட்ட கீர்த்தனைகள் அடங்கியிருக்கின்றன. இத்துடன் இக்கீர்த்தனைகளின் இராகங்களுக்குரிய ஆரோஹண அவரோஹணத்தையும், தாளங்களை சாஸ்திர முறையில் உபயோகிக்கும் ஒழுங்கையும் விபரித்துக் காட்டியிருக்கிறது.

இப்புத்தகத்தில் உள்ள பாடல்கள் பள்ளிக்கூடங்களில் கற்பிப்பதற்கும், தனித்துப்பாடுவதற்கும், தெய்வ ஆராதனை

(92·41)
1131

களில் எல்லாரும் ஏகமாய்ச் சேர்ந்து கடவுளைக் கீர்த்தனம் பண்ணுவதற்கும் ஏற்றது.

இப்புத்தகத்தை வெகு அன்புடன் பிரசுரிக்கத் தயவாய், முன்னின்று உற்சாகப் படுத்திய மதுரை கிரமர்புரம், Y. M. C. A. Secretary, Warden, Candidate Mr. R. J. Gnanavaram அவர்களுக்கும், இதை சீக்கிரம் வெளியிட வேண்டி, என்னை அடிக்கடி தூண்டி உற்சாகப்படுத்திய, கிறிஸ்தவ கவிச் சக்கரவர்த்தியாகிய வேதநாயக சாஸ்திரியா ரவர்களின் மரபினர்களில் ஒருவரான Mr. V. R. Thamburaj அவர்களுக்கும், மற்றும் நண்பர்கள் யாவருக்கும் என் அன்பின் நன்றி கூறற்பாலதே.

ஆகையால் கிறிஸ்தவ சங்கீதாபிமானிகளும், பாடசாலைத் தலைவர்களும் இப்புத்தகத்தை ஆதரித்து, கிறிஸ்தவர்களுக்குள் சங்கீதக் கிளர்ச்சியை உண்டுபண்ணி, அதன் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்வார்களெனப் பூரணமாய் நம்பும்,

C. S. M. Madura.
8—12—1931.

S. D. ASIRVATHAM,
Music Instructor.

ஆரோஹணம்—Ascending order. ஸரிகமபதநி(ஸ்) என்ற ஸப்தஸ்வரங்களும் ஒன்றின்பின் ஒன்ருய்ச்ருதியில் அல்லது த்வனி யில் உயர்ந்து கொண்டுபோவது.

அவரோஹணம்—Descending order (ஸ்)நிதபமகரிஸ என்று இந்த ஸப்தஸ்வரங்களும் தலைகீழாய் ஒன்றின்பின் ஒன்ருய்ச்ருதி யில் அல்லது த்வனியில் இறங்கிக்கொண்டு வருவது.

இப்புத்தகத்தில் அமைந்திருக்கும் தாளங்களும் அவைகளை வழங்கும் விபரமும்:—

ஆதிதாளம்— இது சதுஸ்ரஜாதி திரிபுடதாளம் என்பது. $1_4\ 00 = 8$ அக்ஷர காலம். ஒரு கைதட்டு + 3 விரல் எண்ணிக்கை, 1 கைத்தட்டு + 1 கைவீச்சு. (விஸர்ஜிதம்), 1 கைதட்டு + 1 கை வீச்சு ஆக ஆதிதாள *ஆவர்தத்திற்கு எட்டு அக்ஷர காலமாகும். இத்தாளத்தைப் பொதுவாய், நாம் மூன்று கைத்தட்டுகளால் குறிப் பிடுகிறோம். சாஸ்திரோக்தமாய், கைத்தட்டுடன் விரல் எண்ணிக் கை செய்யும் போது, சுண்டுவிரல் பக்கம் ஆரம்பித்தெண்ணுவது இயல்பு.

ரூபகதாளம்—இது சதுஸ்ரஜாதி ரூபகதாளம் என்பது. $0\ 1_4$ 6 அக்ஷரகாலம். 1 கைதட்டு + 1 கைவீச்சு, 1 கைத்தட்டு + 3 விரல் எண்ணிக்கை ஆக சதுஸ்ரஜாதி ரூபகதாள ஆவர்தத்திற்கு 6 அக்ஷர காலமாகும். இத்தாளத்தை நாம் பொதுவாய் 2 கைத்தட்டு களாலும், 1 கை வீச்சாலும் குறிப்பிடுகிறோம்.

ஏகதாளம்—இது சதுஸ்ரஜாதி ஏகதாளமென்பது. 1_4 — 4 அக்ஷரகாலம். 1 கைத்தட்டு + 3 விரல் எண்ணிக்கை ஆக சதுஸ்ர ஜாதி ஏகதாள ஆவர்தத்திற்கு 4 அக்ஷரகாலம். இத்தாளத்தை நாம் சாதாரணமாய் 1 கைத்தட்டால் குறிப்பிடுகிறோம்.

*ஆவர்தம்—ஒரு முழு அல்லது பூரண தாளத்தின் மொத்த அக்ஷர காலங்களுக்கு ஆவர்தம் என்று கூறுவது.

இப்புத்தகத்தில் அமைந்திருக்கும் இராகங்களும், ஆரோஹண அவரோஹணமும் தாய்ராகங்களும், ஸ்வரங்களும்.

நெ.	இராகங்கள்.	ஆரோஹணம்.	அவரோஹணம்.	தாய் இராகங்கள்.	நெ.	ஸ்வரங்கள்.	
1	நாதநாமக்ரிய	ஸரிகமபதநி	நிதபமகரிஸநி	மாயாமாளவ [கௌளம்	15	ஸரிகமபதநி 121 12	1. சுத்தரிஷபம் ஸாதாரணகாந்தாரம் சுத்தமத்யமம்
2	ஹிந்துஸ்தான் [காபி	ஸரிமபநிஸ்	ஸ்நிதநிபமகரிஸ	கரஹரப்ரிய	22	ஸரிகமபதநி 211 21	சுத்ததைவதம் கைசிகிநிஷாதம்
3	ஹரிகாம்போதி	ஸரிகமபதநிஸ்	ஸ்நிதபமகரிஸ	ஹரிகாம்போதி	28	ஸரிகமபதநி 221 21	2. சதுஸ்ருதி ரிஷபம்
4	சுருட்டி	ஸரிமபநிஸ்	ஸ்நிதபமகபமரிஸ	,,	,,	,,	அந்தரகாந்தாரம் சுத்தமத்யமம்
5	கமாஸ்	ஸகமபதநிஸ்	ரிஸ்நிதபமகஸ	,,	,,	,,	சதுஸ்ருதி தைவதம்
6	சங்கராபரணம்	ஸரிகமபதநிஸ்	ஸ்நிதபமகரிஸ	தீரசங்கராபரணம்	29	ஸரிகமபதநி 221 22	காகலி நிஷாதம் 3. ஷட்ஸ்ருதி ரிஷபம்
7	பிஹாக் or பியாக்	ஸகமபநிதநிஸ் ஸரிகமபதநிஸ்	ஸ்நிதபமகாரிஸ ஸ்நிபமரிஸ	,,	,,	,,	ஷட்ஸ்ருதி
8	கெம்பீர நாட்டை	ஸரிக்மபதநிபநிஸ்	ஸ்நிபமரிஸ	சலநாட	36	ஸரிகமபதநி 321 32	தைவதம்

கிறிஸ்து சமயக் கீர்த்தனைகள்

இரண்டாம் பாகம்.

வெண்பா.

முத்திதரும் முத்தே முதற்பொருளே முன்னின்று
சித்திபெறக் காத்தருளும் சீமானே—பத்திமிக
ஆசீர்சொல் பல்லவியா மாரம் பொலிவுபெறத்
தாசீர் கமலமலர்த்தாள்.

திருப்புகழ்.

'பகையைத்தவிர்க்க' என்ற ராகத்தின்படி

ஹரிகாம்போதி ராகம்—ஆதி தாளம்.

குருவே குறித்த கணமே கதித்த
குணசீலனே நல் லனுகூலா

குன்றுமறிவை என்றும் பதித்த
குறும்பன் கடிவெல் மனுவேலா

உருவே திருத்வ தத்வம் விளக்கும்
உலகின் வழியே வரவேணும்

உள்ளமுமக்குள் ஊன்றிப்பிழைக்கும்
உணரும் ஒளியே தாவேணும்

தருவே சகத்தில் தளிரும் சத்தியத்
தனலா மெஞ்ஞான மறைசீராய்

தந்துனுறவில் தயவாய்தினம்வைத்
தவிரஞ் ஞானத் கறைபூராய்

திருவே மனது திரும்பும் பாவியைத்
திருத்துமருள் தந் தாளையா

திருச்சித்தம்செய்துன் திகழுமாவியைத்
திராளா யீந்தகம் மீளையா.

தெய்வதூதன் தெரிவிப்பது.

'துதிதங்கிய பரமண்டல' என்ற புதிய ராகத்தின்படி

கெம்பீர நாட்டை ராகம்—ரூபக தாளம்.

பல்லவி

பரத்தில் இருந்தனுப்பப்பட்ட பட்சமுள்ள மெய்த்தூதன்நான்
பர நற்செய்தி அறிவிக்கிறேன் பயப்படாதிருங்களேன்

சரணங்கள்

1 சந்ததம் சகலருக்குமிதோ சார்ந்துறும் நன்மையாய் வரும்
சந்தோஷத்தை மகிழ்வுடன் கூறும் சுவிசேஷகன் பாரும்

2 இன்றுங்கள் கர்த்தரானவரென்ற இன்பமேசியா ரட்சகர்
நன்று தாவீதினூரில் திக்கில்லார் நரர்மீட்பென ஜென்மித்தார்

3 இன்ப வீட்டில் நாம் ஏகமாயிருந் திளைப்பாறிடத் தக்கதாய்
இன்னல் பாவம் இல்லாது நீக்குவார் இவர் நம்மன்புமிக்கதாய்

4 குறிப்பைச் சொல்வேன் ஏழையாயிந்த குழந்தை கந்தை [பொதிந்து
அறிந்தா முன்னணையின்கண் அயர்வார் பரன் அமைந்து

விசுவாசிகள் விளம்புவது.

'கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்' என்ற புதிய ராகத்தின்படி

நாதநாமக்ரியா ராகம்—ஏக தாளம்.

பல்லவி

துதித்திடுவோம் நாம் துதித்திடுவோம்—வெகு
துரிதமாயர்பின்சென்று துதித்திடுவோம்

சரணங்கள்

1 பதியின் சுவானவனைத் துதித்திடுவோம்—பரம
பாவலர்கள்போற்றுவோனைத் துதித்திடுவோம்
அதிசயமானவனைத் துதித்திடுவோம்—அகத்
தானந்தத்தாண்டவம்செய்து துதித்திடுவோம்
அதிகத்தாழ்மைபூண்டோனைத் துதித்திடுவோம்—அன்
ஆதரவானபூமானைத் துதித்திடுவோம் [பின்
புதியமனதுடனே துதித்திடுவோம்-பூவின்
புகழ்ச்சிமாய்கையென்போனைத் துதித்திடுவோம் (துதித்

2 உலகமுண்டாக்கியோனைத் துதித்திடுவோம்—உவந்
தொன்றுமிலான்போல்வந்தோனை துதித்திடுவோம்
திலகன்யூதசிங்கனைத் துதித்திடுவோம்-திவ்ய
திருத்வனேகசுதனைத் துதித்திடுவோம்
பலகலைக்யானக்கோனைத் துதித்திடுவோம்-பற்றும்
பத்தியின்சக்தியணிந்து துதித்திடுவோம்
அலகையையோட்டுவோனைத் துதித்திடுவோம்—அதை
அதஞ்செய்தடக்குவோனைத் துதித்திடுவோம் (துதித்

———

'திருமுதல் கிருபாசனனே' என்ற புதிய ராகத்தின்படி

சங்கராபரண ராகம்—ஆதி தாளம்.

திபதைகள்

1 இன்னலகற்றுமெம் மிறைவா தோத்ரம்
இன்றெமின்மீட்பாயுதித்தாய் தோத்ரம்—
இனி பயம் இல்லை தோத்ரம்—இம்மியெனும்
இனி பயம் இல்லை தோத்ரம்—மாநேசா

2 திருக்குமரா திருத்வஞானு தோத்ரம்
சீர் கர்த்தத்வம் தோள் மேல் தோத்ரம்—
சர்வ அதி சயா தோத்ரம்—சகத்தில்
சர்வ அதி சயா தோத்ரம்—மாநேசா

3 ஆதியாலோசனைக் கர்த்தா தோத்ரம்
அதிக வல்லமையுள்ள தேவா தோத்ரம்
ஆதித்தனே யெம் தோத்ரம்—அன்புமிகும்
ஆதித்தனே யெம் தோத்ரம்—மாநேசா

4 நித்யபிதாவே நிர்மலனே தோத்ரம்
நித சமாதானப் பிரபுவே தோத்ரம்
நிதம் புரிந்தோம் தோத்ரம்—நினைந்துனை
நிதம் புரிந்தோம் தோத்ரம்—மாநேசா

'சத்தாய் நிஷ்களமாய்' என்ற ராகத்தின்படி

சங்கராபரண ராகம்—ரூபக தாளம்.

தேவாரம்.

1 ஈசாயின் துளிரே இஸ்ரவேலரின் பண்புளரே
ஈசாயெம் உயிரே இன்னல்நீக்கு மன்பின்மலரே
வீசாய் மின்னொளியே விளைந்தேறு மிருள்ஒழிய
கூசா தன்னுறவில் கூடக்கூவி யெமைவிளியே

2 சுத்தா சற்குணனே சுபசோபன நற்கனியே
அத்தா அற்புதனே அறையாரணம் கற்கனிய
முத்தாய் வித்தகனே முன்னேதீர்க்கர் புகல்முனியே
வித்தாய் பெத்தலேக்கண் விந்தைவந்தார் வழுத்தினியே

3 ஆதம் செய்தவினே யாவும்நீக்கு மொளிர்மதியே
ஆதரித் திம்மையே யணைத்தாளும் க்ருபாநிதியே
வாதஞ் செய்கடியை வதைத்தோட்டும் வல்லாபதியே
நீதம் மிகும்நெறியே நித்தம்பற்ற நீரெம்கதியே

4 தானந் தானடையும் தகுந்தன்மை இலாப்பயமே
ஆனதால் தருணம் ஆகும்மீட்பாய் வந்தீர்நயமே
ஆனந்தா சொரூபா ஆற்றித்தேற்று மருண்மயமே
ஞானந்தா நிருபா நின்நாமம் நவில்வயமே

‘மண்ணுக்கும் விண்ணுக்கும்மேலான’ என்ற ராகத்தின்படி

சுருட்டி ராகம்—ரூபக தாளம்.

தேவாரம்.

1 விண்ணவர் வண்ணப்பா மகிழுங் கண்மணியே
விமலமகிமை சாற்றும் விந்தைக் கிண்கிணியே
அண்ணல் தாவீதின் வம்சம்ஆன நன்மணியே
ஆதரித் தருள்தரும் அன்பின் மாமணியே

2 எண்ணரும் ரட்சிப்பை யென்றும் நன்றளிக்க
எந்தை யேசுக்கிறிஸ் தெல்லாரையும் விளிக்க
புண்ணுகச்செய்யும் பொல்லாப்பேயனே யொழிக்க
பூதலம் பிறந்தார்நாம் பூர்த்தியாய்க் களிக்க

3 நிண்ணயம் நித்யவீடு நல்கும் நல்லரசே
நீடும் வாடாக்கிரீடம் சூடுவார் சிரசே

தண்ணொளி வீசுமிவர் தாரகம் உரசே
தண்டம்செய்து சாற்றும் ஜெயசுப முரசே

4 பண்பாடிப் பரமனைப் பற்றியே துதிப்பாய்
பாசங்கொண்டிவர் சேவை பண்ணும் முஸ்திப்பாய்
கண்ணுங் கருத்துமாயிக் காரணம் மதிப்பாய்
காதலாய் ஆரணம் கற்றெங்கும் விதைப்பாய்

'தாயிடத்தில் அன்பில்லாத' என்ற ராகத்தின்படி

ஹிந்துஸ்தான் காபி ராகம்—ஆதி தாளம்.

பல்லவி

ஆதம்வினைதீர்க்கும் பாலன் அவதரித்தாரே

அனுபல்லவி

அவதரித்தாரே அலகை அலறவைத்தாரே ஆதம்

சரணம்

ஆதரையோர்தழைக்க ஆகும்மீட்பால்பிழைக்க
ஆதரவளிக்குந்துய்ய ஆண்டவன் நிருபன்
ஆண்டவன் நிருபன் அன்பின் ஆனந்த சொரூபன் ஆதம்

(தொகையரு)

ஆதிமுதல் வார்த்தையாய் அமலனாய் ஆனந்தமீட்புமாய்
ஆகி நின்றே

நீதிமிகும் நித்யனாய் நற்குணப்பூஷனாய் நானிலம்
நிலவும் என்று

ஓதியநல் லாரணவொண் ணருள்உண்மையே உதித்திதோ
உலவியின்றே

சாதிகள் யாவரும் சார்ந்துறவாடிட தருமகக்கனிவுடன்
குலவுதொன்றாய்

ஷை சரணத்தொடர்

நீதிமிகும் நித்யவொளி நீடும் மெய்யானவழி
சாதிகளுக்கேற்ற ஜீவன் சத்ய தாயகன்
சத்ய தாயகன் தெய்வ தத்வ நாயகன் ஆதம்

அண்டபகிரண்டம்யாவும் அண்டும்பர தண்டம்செய்ய
தூண்டும்தூய ஆவியெங்கும் துரிதமே யோங்கும்
துரிதமே யோங்கும் சுத்தி கரித்துமே தாங்கும் ஆதம்

'காமிசத்ய பாமா' என்ற ராகத்தின்படி

கமாஸ் ராகம்—ஆதிதாளம்.

பல்லவி

ராஜகாருண்ய லாவண்யன் ஜெனித்தார்
லாவண்யன் ஜெனித்தார்
ஜெனித்தார்
ஜெனித்தார் நமின் ராஜ

அனுபல்லவி

தாசர்புகழ் சேயன் தாரணியோர்கள் தூயன்
நேசம் மிகும் மெய் ஏசையன்
ஏசையன்
ஏசையன்
ஏசையன் நமின் ராஜ

சரணங்கள்

1. இன்பானுகூல சுதன் இயம்புமிம்மானுவேலன்
தேன் சுவை யாரண நூலன்
நூலன்
நூலன்
நூலன் நமின் ராஜ

2. சத்ய உதாரபரன் சர்வபாவதிகாரன்
ஆத்மம் அறியும் ஆற்றலன்
ஆற்றலன்
ஆற்றலன்
ஆற்றலன் நமின் ராஜ

நவவருடம்.

‘சீர் ஏசு நாதனுக்கு’ என்ற புதியராகத்தின்படி

சுருட்டி ராகம்—ஆதி தாளம்.

பல்லவி

இம்மட்டும் நம்மைக்காத்த ஜெயபரனை பேற்றி
இதய கமலமலர்ந் திறைஞ்சுவீர் போற்றி

அனுபல்லவி

இம்மையிவர் கிருபை யெண்ணியே பார்த்தால்
அம்மா! அறையவொண்ணு யாவையுஞ் சேர்த்தால் இம்

சரணங்கள்

1 அல்லும்பகலும் நல்லசொல்லைப் போலகழியும்
ஆகும் கனு, நீர்க்குமிழ் ஆவன போலொழியும்
வல்ல உலகவாழ்வும் வாலிபமும் அழியும்
வெல்லும் விமலனருள் வளமிகப் பொழியும் இம்

2 புசலைவரக் கண்டதாய் பிள்ளையைக்காக்கும் வண்ணம்
புவனம் புரக்கும் அப்பன் பேணுவார் திண்ணம்
பசலைக்குணம் பெருகும் பாவிகளையே யெண்ணும்
பரமகரம் சீர் தூக்கப் பாசமாய் நண்ணும் இம்

3 சென்றவருடம் சுப க்ஷேமம்லாபம் தந்து
சிந்தை மகிழுங் கிரியை செய்தார் உவந்து
தோன்று மிவ்வாண்டிலும்தன் சோபனமே மிகுந்து
திகழும் வழிநடத்த திடத்துவார் தகுந்து இம்

'பூங்காவிநோதமே' என்ற ராகத்தின்படி

ஹரிகாம் போதிராகம்—ஆதிதாளம்.

பல்லவி

பூவில் ஆனந்தமே புதுவருடக் கொண்டாட்டமே
கூடும் ஆடும் கிண்ணரம்
போடும் பாடும் இந்நேரம் பூவி

பூவும் தூவும் மகிழ்வுடன்
கூவும் தாவும் புகழ்வுடன் பூவி

கண்குளிரக் காணுமாண்டை விண்டு சொல்லும்
விண்ணதிரும் மண்முழக்கங் கொண்டு நில்லும் பூவி

அனுக்ரகவருடமணுகிட நம்மை
அனுதினமன்புடன் காத்தாரிம்மை பூவி

அருள் பொருளானவர் மலரடியிணையே
அரும் பெரும் வரம்பெற துதியவர் துணையே பூவி

அகமறிந்திடும் அற்புத வேதா
சுகம்புரிந்திடும் சற்குரு நாதா பூவி

அனுபல்லவி

தேவாரத் தோத்ரம் சூடி
நன்றியுடன் திடமனங் கனிந் தாடி பூவி

சரணம்

ஜீவ சர்வதிகாரா சேர்த்தெமை — சீர்மிகும் வழியில் வையும்

ஆவலுடனயலார் அன்புடன் — யாவரு மொன்றி உய்யும்

600 008.

ஆவிதநதாளுமானந்த மெங்காளும்ஆகுமிவ்வாண்டில்
தாவியே பூண்டுன் தாரகத் தண்ணருள் வேண்டும் — பூவி

'வானவர் போற்றும் சேந்தூர்' என்ற ராகத்தின்படி
ஹிந்துஸ்தான் பியாக் ராகம்—ஆதி தாளம்.

பல்லவி

ஞானமாய்க் காணும் நவ வருடம்
நானிலம் நவிலும் மாபாடம்

அனுபல்லவி

தானந் தந் தாளுமெய்ப் பொருளாம்—தயவுவைத்
தான நல்லருளாம். — ஞான

சரணங்கள்.

1. காலம் சொல் போலவே கழியும்
காதல்கொள் காரியம் எதுவும்
கோலம்செய் டம்பமும் அழியும்—கருதும்
ஜாலமும் ஒழியும் — ஞான

2. இன்னல்கள் மாற்றுவார் விரைந்து
அன்னைமிக் கன்பினும் பரிந்து
மின்மழை ஆவியைச் சொரிந்து—மண்மீது
மன்னும் மனுவறிந்து — ஞான

3. பாத்ரமாய்ப் பாவம்பல முனிந்து
நேத்ரம்போல் காப்பார் மனங்கனிந்து
ஆத்ரமாய் அமலன்முன் பணிந்து—ஆனந்த
தோத்ரம் செய் தணிந்து — ஞான

'கந்தா காருண்யனே' என்ற ராகத்தின்படி

ஹிந்துஸ்தான் காபி ராகம்—ஆதி தாளம்.

பல்லவி

ஈந்தார் நவ வருடம்
இன்பம் ததும்பும் திடம்

அனுபல்லவி

சுந்தரப்ரா[illegible] ரீகக் குருவிடம்
சூழ்ந்திருப்பது நற்கடம்
சந்ததம்பணிந் தன்பதையணிந்
திங்கிருக்கவே நம்சடம் (ஈந்)

(தொகையரு)

அதிரூப சுந்தர அமலனனந்தனே யாதியாய்
அன்றுமின் றென்றுமிருக்கின்றவன்
அதிகார வார்த்தையால் அகிலம்காண் யாவையும்
அன்புட னமைத்திருக்கின்றவன்
மதியுடன் காலாகாலத்தையும் மாற்றியே மாண்புடன்
மண்ணதை யாண்டுநிற்கின்றவன்
மதியொளி வீசியே வளம்பட மாந்தர் தம்மாயுளும்
மன்னருள் வைத்திருக்கின்றவன்.

தொகையரு பல்லவி எடுப்பு.

தந்தார் ஜீவன் சுகம்
சந்தோஷ முகம் (ஈந்)

சரணம்

ஆரணக் கருணாகரன்
அருணோதயக் குருவானவன்
தாரணிவைத் தாதரித்தினி
தன் பணி தாநற்கனி (ஈந்)

Copies can be had from

Y. M. C. A. Kremmerpuram,

MADURA.

To,

Mr. S. D. Asirvatham Bahgavathar,

C. S. M. Post Box 39, Madura.